நிந்தவூர் பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிந்தவூர் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்ட வாகனத்தரிப்பிடத்தின் பெறுமதியான ரூபா 1,000,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 64 அலுவலக தளபாடங்கள் 2015 திசெம்பர் 22 ஆம் திகதி ஏலவிற்பனை மூலம் ரூபா 52,750 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும் அவற்றின் கிரயம் கணக்குகளிலிருந்து பதிவழிக்ககப்படவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையைவிட்டு நீங்கிய 25 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா 141,374 தொகை 09 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 22 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 2,951,150 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளின் அத்தியாயம் I இன் பிரிவு 5 (xii) பிரகாரம் பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல்

என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,731,248 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,470,047 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 261,201 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 ஆதனவரி அறவீடு

சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் 15,650 ஆதன உரிமையாளர்கள் வசிக்கின்ற போதிலும், மீளாய்வாண்டில் 842 ஆதன உரிமையாளர்களிற்கு மாத்திரமே "K" படிவம் அனுப்பப்பட்டிருந்ததனால் ஆண்டுக்காக பாதிடப்பட்ட ரூபா 8,548,000 ஆதனவரித் தொகையில் ரூபா 1,570,738 மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 இறைச்சிக் கடைக் குத்தகை அறவீடு

1980 முதல் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 3,173,466 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பழைய அலுவலகக் கட்டிடம் 2015 யூன் 30 ஆம் திகதி முதல் சுகாதார இராஜாங்க அமைச்சரின் பிராந்திய அலுவலகத்திற்காக ரூபா 15,000 மாத வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரையான வாடகை ரூபா 270,000 தொகையினை 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை சபையின் JCB வாகனத்தை வெளிக்கள வேலைக்காக தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்கியதன் மூலம் பெறவேண்டிய ரூபா 530,820 வாடகைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திண்மக் கழிவுகளை தரம் பிரித்து சேகரிப்பதற்காக மீளாய்வாண்டில் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 496,215 பெறுமதியான 81 குப்பைத் தொட்டிகளில் 42 குப்பைத்

தொட்டிகள் 2017 யூலை 20 ஆந் திகதி வரை குறித்த தேவைக்கு பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 299,965 பெறுமதியான 35,290 குப்பை சேகரிக்கும் பைகளில் 33,800 பைகள் குறித்த தேவைக்கு பயன்படுத்தப்படாது 2017 யூலை 31 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டு பிரதேச சபைகளை வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் சிறுவர் பூங்காவிற்கும் வாகனத் தரிப்பிடத்திற்கும் புற்தரைகளை இடுதல் வேலை பூர்த்திசெய்யப்பட்டதாக ஆவணங்களைத் தயாரித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 144,300 தொகை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், குறித்த வேலை இன்று வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் சபையினால் சிறுவர் பூங்காவிற்கும் கடற்கரை பூங்காவிற்கும் கூரை வேலைகளிற்காக 800 சோடி கிடுகு ஒரு சோடி ரூபா 49 வீதம் ரூபா 39,200 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் கணக்காய்வுக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களிற்கமைய ஒரு சோடி கிடுகின் சந்தை விலை ரூபா 20 ஆக காணப்பட்டதனால் ரூபா 23,200 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| | ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |